**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ.,/எம்.எஸ்,சி., பட்டப்படிப்பிற்கு பெறும் முதல் ஊக்க ஊதிய உயர்விற்குப் பின் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியாக உயர்கல்வி எம்.எட்., உடன், எம்.பில்., மற்றும் பி.ஹெச்டி., பட்டங்களை சேர்த்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (இ2)துறை

அரசாணை (1டி) எண்.18

நாள்: 18.01.2013
திருவள்ளுவராண்டு 2044.
தை 5.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.1024, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, நாள் 9.12.1993
2. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண்.98543/கே/இ1/10 நாள் 08.12.2010.

******

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எஸ்,சி., தேர்வு பெற்ற பிறகு பெறும் முதல் ஊக்க ஊதிய உயர்வுடன் பட்டதாரி ஆசிரியர் பதவி மற்றும் தலைமையாசிரியர் பதவியில் பணிபுரியும்போது எம்.எட்., பட்டத் தகுதி பெற்றிருந்தால் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியுடையவராகிறார் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், தற்போது பல்கலைக் கழகங்கள் தொலை தூரக் கல்வித் துறை, பல்கலைக் கழகப் பாடப் பகுதிகளிலிருந்து எம்.எட்.,–ஐ நீக்கிவிட்டதால், எம்.எட்., கல்வித் தகுதியை தொலை தூரக் கல்வி மூலம் பெற இயலாத சூழ்நிலை உள்ளது எம்.பில்., அல்லது பி.ஹெச்டி., போன்ற உயர் கல்விகளை தொலை தூரக் கல்வி மூலம் பெறும் நிலை உள்ளதால் ஒரு ஆசிரியர் தமது மொத்தப் பணிக் காலத்தில் உயர் கல்விக்காக 2 ஊக்க ஊதிய உயர்வுகள் மட்டுமே பெற முடியும் என்ற வரையறைக்குட்பட்டுள்ள நிலையில், தற்போது பட்டதாரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ./ எம்.எஸ்சி.,–க்கு பெறும் ஊக்க ஊதிய உயர்வைத் தவிர மேலும் ஒரு ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியான உயர்கல்வியான எம்.எட்., மட்டுமே என மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ளதற்கு பதிலாக எம்.எட்., பட்டத்தோடு எம்.பில்., அல்லது பி.ஹெச்டி., பட்டங்கள் பெற்றாலும் அவர்களுக்கு மற்றொரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாமென பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரை அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு அதனை ஏற்று, பட்டதாரி ஆசிரியர்கள் உயர் கல்வி தகுதியான எம்.ஏ., எம்.எஸ்,சி.,–க்கு பெறும் முதல் ஊக்க ஊதிய உயர்வை தவிர, மேலும் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு பெற அரசாணை எண். 1024, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, நாள் 9.12.1993–ன் படி

www.TeacherTN.com

அனுமதிக்கப்பட்ட தகுதியான உயர்கல்வி எம்.எட்., என்பதற்கு பதிலாக, எம்.எட்., அல்லது எம்.பில்., அல்லது பி.ஹெச்டி., பட்டம் பெற்றிருந்தால் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்விற்கான உயர்கல்வித் தகுதியாக கருதி, அதாவது ஒரு ஆசிரியரின் மொத்தப் பணிக் காலத்தில் அதிகப் பட்சமாக இரு ஊக்க ஊதிய உயர்வுகளே அனுமதிக்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டாவது ஊதிய உயர்வு அளிக்கலாம் என முடிவு எடுத்து அவ்வாறே அரசு ஆணை வெளியிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண். 1436/Edn.II/2013, நாள் 11.1.2013ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 (பெயர் உறையில்)
மாநிலக் கணக்காயர்,சென்னை–35.
மாநிலக் கணக்காயர் (CAS),சென்னை – 9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/79/35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்துக் கருவூல அலுவலர்கள்.
நகல்
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றம் சிறுபான்மையினர் நலத்துறை,சென்னை–9.
ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
நிதி(கல்விII)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை (மேநிக) துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாகச்சீர்திருத்தத் துறை,சென்னை–9.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றம் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயமுத்தூர்.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர்,சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின்நேர்முக உதவியாளர், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

www.TeacherTN.com